إِنَّ الدِّينَ عِندَ اللَّهِ الْإِسْلَامُ — لَا إِلَٰهَ إِلَّا اللَّهُ مُحَمَّدٌ رَسُولُ اللَّهِ



# Friday Sermon

**HADHRAT MUHYI-UD-DIN AL-KHALIFATULLAH**

**MUNIR AHMAD AZIM**

*07 September 2018*
*(26 Dhul-Hijjah 1439 AH)*

## INVOCATIONS (DUAH) IN ISLAM

## இஸ்லாமில் பிரார்த்தனைகள்

**(Tamil Version -** தமிழ் பதிப்பு)

சலாமிற்கு பிறகு தஷஹ்ஹுதும், தஅவசும், அல்.ஃ.பாத்திஹாவும் ஓதிக்கொண்டு **ஹஸ்ரத் கலீ.ஃ.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் கீழ்வருமாறு தம் ஜுமா பேருரையினை ஆரம்பித்தார்.

“**அவனை அணுகும் வழியினைத் தேடுங்கள்**” (5:36).

எங்கள் இறைவா! நீ மன்னிப்பவனாகயிருக்கின்றாய். நீ மன்னிப்பை விரும்புபவனாகயிருக்கின்றாய். அதனால் நீ என்னை மன்னித்துக் கொள்வாயாக. ஆமீன்.

துவா என்பது ஒரு இரத்தலாகும், பிரார்த்தனையாகும், வேண்டுகோளாகும். நாம் அதாவது முஸ்லீம் சமுதாயம் அல்லாஹ்வின் அருளை பெறுவதற்காக செய்யும் ஒரு மன்றாடுதல் ஆகும். அதாவது, நமது தேவைகளை பூர்த்தி செய்வதற்காகவும், இறைவன் தனது அருட் கொடைகளை நமக்கு அளிப்பதற்காகவும், நமது பாவங்களை மன்னிப்பதற்காகவும், நமது கஷ்டங்களிலிருந்து விடுபட செய்வதற்காகவும், நமது பிரச்சனைகளிலிருந்து மீட்பை பெறுவதற்காகவும், நமது தவறுகளை சரி செய்வதற்காகவும், சரியான பாதையில் நம்மை வழி நடத்துவதற்காகவும், நமது இதயங்களுக்கு அறிவொளி வழங்குவதற்காகவும், நன்மை எது, தீமை எது என்பதை பகுத்தறிவதற்காகவும், உண்மையான வழியை அடைவதற்காகவும், அதை விட மேலான மன அமைதி மற்றும் இறை நட்பினை பெறுவதற்காகவும் நாம் பிரார்த்தனை என்னும் வேண்டுதலை பயன்படுத்துகிறோம்.

பிரார்த்தனை என்பது எல்லா நபிமார்களும், உண்மையான அனைத்து நம்பிக்கையாளர்களும் விரும்புகின்ற ஒரு ஆயுதமாகும். எந்த ஓர் சுமை நிறைந்த பணிகளுடன் அவர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்களோ, அப்பணிகளை முன்னெடுத்து செல்லும் வழியில் சந்திக்க நேர்ந்த சோதனைகளை அனைத்தும் பொறுமையுடன் எதிர் கொள்வதற்காக அவர்கள் அனைவரும் அல்லாஹ்விடம் பிரார்த்தனைகள் செய்து வந்தனர். அல்லாஹ்விடமிருந்து தோன்றிய நபிமார்களுக்கும் இறை பக்தர்களுக்கும் கடந்த காலங்களில் பல்வகையான சோதனைகளை சந்திக்க நேர்ந்தது. அந்நேரங்களில் அல்லாஹ்வின் உதவியினை பெறுவதற்காக அவர்கள் எல்லோரும் பிரார்த்தனைகள் செய்து வந்தனர். அதை போன்று இக்காலகட்டத்திலும் வரும் காலகட்டங்களிலும் அத்தகைய அல்லாஹ்வின் பிரதிநிதிகளும், இறைபக்தர்களும் தோன்றுவார்கள். அவர்களும், தங்களுக்கு நேரும்

கடினமான சோதனைகளை வெல்வதற்காக அல்லாஹ்வின் உதவியை தேடி பிரார்த்தனைகள் செய்வார்கள். குறிப்பாக நபிமார்களாகிய ஹஸ்ரத் நூஹ் (அலை), இப்ராஹீம் (அலை), ஜக்கரியா (அலை), அயூபு (அலை) மற்றும் இறைதூதர்களும் தங்களது வாழ்க்கையில் சந்திக்க நேர்ந்த துயரம் மற்றும் சோதனை கட்டங்களிலிருந்து மீட்பை பெற எவ்வாறு பிரார்த்தனை செய்திருந்தனர் என்பதை திருமறையின் வெவ்வேறு வசனங்களிலிருந்து நமக்கு அறிய முடிகிறது.

எல்லா சூழ்நிலைகளிலும் அல்லாஹ்வின் உதவியை தேடிக்கொள்ளுமாறு காத்தமுன்னபியீன் அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நம்பிக்கையாளர்களை மிக ஆழமாக அறிவுறுத்தி வந்ததாக புனித நூல் நமக்கு கற்பிக்கிறது. எந்த ஓர் வேலையை நீங்கள் ஆரம்பிக்கும் போதும் எளிதில் செய்யமுடியும் ஒரு துவாவை நமக்கு கற்பிக்கபட்டுள்ளது. அதாவது " பிஸ்மில்லாஹ்" என்னும் துவா. பிஸ்மில்லாஹ் என்னும் இத்துவா என்பது மனிதன் மற்றும் அவரது படைப்பாளன் இடையே ஆரோக்கியமான, பரிபூரணமான, இணக்கமான உறவை ஏற்படுத்துவதற்கு சிறந்த ஒரு வழியாக அமைந்துள்ளது. அது நம்பிக்கை என்னும் கருத்தின் அடிப்படையிலாகும். ஏனெனில் மனித குலத்தின் உச்சத்தை அடைந்த நபிமார்கள் கூட அல்லாஹ்விடம் ஆழமான நட்பை உருவாக்கியது இப்பிரார்த்தனைகளில் நிரந்தரம் மூழ்கியிருந்ததனால் ஆகும்.

எந்த சூழ்நிலையிலும் துவா என்னும் இந்த இறை வழிபாடை தவிர்க்க கூடாது. ஏனெனில் இது தொழுகை மற்றும் திருக் குர் - ஆன் ஓதுதல் ஆகிய இறைவழிபாடுகளுக்கு பின்னர் முற்றிலும் மேன்மை வாய்ந்ததும் சிறந்ததுமான ஒரு இறை வணக்கமாகும். இதன் முக்கியத்துவத்தைக் குறித்து நீங்கள் ஆராய்ந்தால், சலாத் என்னும் இப்பிரார்த்தனையில் அதிகமும் திருமறை வசனங்களாகும். அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் துவாவைப் பற்றி கூறியதும் போதித்ததும் எவ்வளவு சரியானது என்பதை பாருங்கள். "**துவா என்பது இறைவணக்கத்தின் சாராம்சமாகும்**" (திர்மதி). எந்த நேரத்திலும் துவாக்கள் செய்வதன் தேவையென்ன? பல்வேறு ஹதீஸ்கள் வழியாக இதனை பரிந்துரைக்கப் பட்டிருப்பது எதற்கு?

நிச்சயமாக அல்லாஹ்வின் மீதான நம்பிக்கையை வெளிப்படுத்திடவும் அதனை நம்மிடம் உயிருடன் நிலை நாட்டிடவும் துவா மிக அவசியமான ஒன்றாகும். எல்லா நேரங்களிலும் அதனை புதுப்பித்திடவும் தொடர்ந்து அதனை ஒருங்கிணைத்திடவும் துவா அவசியமாக இருக்கிறது. அதனால்தான் துவா என்பது இறைவணக்கத்தின் சாராம்சம் என்று திரு நபி மொழிகளில் கூறப்பட்டிருப்பது. இலக்கிய முறையில் கூறிக்கொண்டால் துவா என்பது இறை வழிபாட்டின் மஜ்ஜை அல்லது எலும்பு ஆகிறது. இது, இறைவழிபாட்டில் நம்மை அடிபணிய வைத்திடவும் அதற்கான எண்ணத்தை நம்மிடம் உருவாக்கிடவும் செய்கிறது. அது மூலம் நாம் அல்லாஹ்வின் மீது முழுமையாக கவனம் செலுத்துகிறோம் மட்டுமின்றி, நாம் நமது இதயத்தின் கண்களால் அவனை பார்க்கிறோம், தியானம் செய்கிறோம்.

ஒரு பாரம்பரிய சடங்காக துவாவை நாம் எண்ணக் கூடாது. துவா என்பது நம் கைகளை உயரமாக உயர்த்தி ஆகாயத்தை நோக்கி சில வார்த்தைகளால் மட்டும் முணுமுணுப்பதல்ல. அத்தகைய சடங்கு முறையில் துவா செய்யும் போது அவரது கண்கள் வலது மற்றும் இடது புறத்தில் ஓடுவதுடன் பிறரின் விவகாரங்களில் அவர் உளவு பார்க்கவும் செய்வார்.

துவா என்பது மனிதனுக்கும் அவரது படைப்பாளனுக்கும் உள்ள நேரடியான ஒரு தொடர்பாகும். அந்நிலையில், அவருக்கு முழுமையாக மற்றொரு எண்ணம் இருக்காது. அவரது மொழியில் அவர் இறைவனிடம் பேசுகிறார். அல்லாஹ்வின் ஒரு அடியார் தனக்கு உகுந்த நிலையினில் அல்லாஹ்விடம் நெருக்கத்தை ஏற்படுத்துவதற்கும், தனது சுமைகளை அல்லாஹ்விடம் கூறுவதற்கும் மிக சிறந்த ஒரு வாய்ப்பு அல்லது தருணம் அல்லது இடம் என்பது அவர் சுஜுதில் ஏற்படும் கட்டமாகும். அவருக்கு இயன்ற வரையில், அவர் விரும்பும் நேரம் வரையில் சுஜுதில் ஏறபட்டு, அல்லாஹ்விடம் மன்றாடிக் கொள்ளலாம். அந்நிலையில் அவர் தன்னை படைத்தவன் முன் முற்றிலும் அடிப்பணிந்திருப்பார். அது மசூதியில் அல்லது தம் மனைக்குள் வைத்தானாலும் சரி, ஃபர்ள், சுன்னத் மற்றும் நபில்

தொழுகைகளில் அவ்வாறு செய்து கொள்ளலாம். அதாவது சுஜுதில் இருந்து உங்கள் துயரம் மற்றும் மகிழ்ச்சியினை அல்லாஹ்விடம் கூறிக் கொள்ளலாம், அவன் பொழிந்த அருட்கொடைகளை எடுத்துக் கூறி அவனுக்கு நன்றியை செலுத்தலாம், அவனது மகிமையை புகழலாம், அவனை துதிக்கலாம். ஏனெனில் அந்நிலையில் அவர் தன்னைத் தானே இறைவனுக்கு சமர்ப்பித்திருக்கின்றார். பூமியை விட கீழ் அவர் சென்றிருக்கின்றார். அல்லாஹ் தன்னை உயர்த்திக் கொள்வான் என்றும் தனக்கு கொடைகளை வழங்குவான் என்றும் அவர் எண்ணுகிறார் அது மட்டுமன்றி, இப்போது நான் கூறியது போன்று அவருக்கு தனது இரு கரங்களை உயர்த்தியும் அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்து கொள்ளலாம். ஆனால் அப்பிரார்த்தனை உள்ள பூரணமான உணர்ச்சியுடன் இருக்க வேண்டும். அல்லாஹ்விடமிருந்து உதவி மற்றும் அடைக்கலத்தினை தேடும் நிலையில் அமைய வேண்டும். அதற்கு அவர் அல்லாஹ்வுக்கு நன்றி கூறுவதுடன் அவனுக்கு கட்டுபட்டு வாழவும் வேண்டும். அவர் தனது துவாவில் முழுமையாக கவனத்தை செலுத்துவதுடன் அவருக்கு வசதியான எந்த நிலையிலாகயிருந்தாலும், அதாவது நின்றுக் கொண்டோ, அல்லது உட்கார்ந்து கொண்டோ, அல்லது படுத்துக் கொண்டோ அல்லாஹ்வை நினைவு கோரலாம். அதனை உயிருடன் உள்ளத்தில் நிலை நிறுத்தியவாறு செய்ய வேண்டும். அவர் தனது இதயம் மற்றும் ஆன்மா கொண்டும், தனது ஆன்மீக நாவு மற்றும் பௌதீக நாவைக் கொண்டும், சிறிய குரலில் திக்கிர் செய்யலாம். அவ்வாறேயானால், அது பிறருக்கு எவ்வித சிரமமும் விளைவிக்காது. அதாவது அவர் தனது இதயம் மூலம் அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்ய வேண்டும். இறை உதவி மற்றும் இறை ஒளியினை அவர் தனது உள்ளத்தால் தேட வேண்டும். அல்லாஹ்வின் உதவியினை நம்பிக்கையாளர்கள் தங்களது பிரார்த்தனைகள் வழியாக தேடவேண்டும் என்றும் அவ்வாறேயானால் அவர்களின் பிரார்த்தனைகளுக்கு நான் பதிலளிப்பேன் என்றும் அல்லாஹ்தான் திருமறை வசனங்கள் மூலம் தெரியப்படுத்துகிறான்.

**“என் அடியார்கள் உம்மிடம் என்னைப் பற்றிக் கேட்டால், நான் அருகில் இருக்கின்றேன். பிரார்த்தனை செய்கிறவர்**

**என்னை அழைக்கின்ற போது நான் அவருடைய பிரார்த்தனையை ஏற்றுக் கொள்கிறேன். எனவே அவர்களும் என் கட்டளையினை ஏற்றுக் கொண்டு என்னிடம் நம்பிக்கை கொள்ள வேண்டும். இதனால் அவர்கள் நேர் வழி பெறுவார்கள்"** ( 2 : 187)

**உங்கள் இறைவன் கூறுகிறான், "என்னையே நீங்கள் பிரார்த்தியுங்கள்: நான் உங்களுக்கு பதிலளிக்கிறேன். எவர் என்னை வணங்குவதை விட்டு பெருமையடித்துக் கொண்டிருக்கிறார்களோ அவர்கள் சிறுமையடைந்தவர்களாக நரகத்தில் நுழைவார்கள்"**

( 40 : 61 )

திருக் - குர் ஆனின் இந்த இரண்டு வசனத்தையும் படிக்க வேண்டும். ஒவ்வொருவருடைய ஆன்மீக மதிப்பீட்டின் படி, அத்துவாவின் முக்கியத்துவத்தின் இரண்டு அம்சங்களை அது காட்டுகிறது. முதலாவது வசனத்தில் அல்லாஹ் தனது அடியார்களின் துன்ப நிலையினை பார்த்து அனுதபிக்கின்றான். தொடர்ந்து அவன் அவர்களுக்கு ஊக்கமூட்டுகிறான். அதாவது, அவர்கள் அவனிடம் மன்றாடிக் கொண்டால் அவர்களுக்கு உதவி புரிவதாகவும், அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து வழங்குவதாகவும் அவன் வாக்குறுதியளிக்கின்றான். இரண்டாவது வசனத்தில் துவாவின் அர்ப்பணம் என்பது ஒரு இறை வணக்க வழிப்பாடாக கருதப்படுகின்றது. அது வாயிலாக அல்லாஹ்விடமான அவர்களின் அடிமைதனத்தை அவன் சோதிக்கின்றான். எனவே அவனை பகைத்துக் கொள்ளாதீர்கள். பின்னர் அவனது கொடூரமான தண்டனைகளுக்கு ஆளாகி விடுவார்கள். இவ்வுலகில் இரட்சிப்பை அடைவதற்கு சிறந்த வழியல்லவா இத்துவா? அதைப்போலவே மறுவுலகில் இதை விட மேலான எவ்வளவோ உயரிய பிரதிபலன்கள் இருக்கிறது! நம்பிக்கையாளருக்கும், அவநம்பிக்கையாளருக்கும் இடையே தெளிவு மற்றும் ஆற்றல் மிக்க ஒரு அடையாளமல்லவா இப்பிரார்த்தனை ? இத்துவா, சொர்க்கம் மற்றும் நரகத்தினை பகுத்து காட்டும் ஒன்றாக இருக்கிறது.

**"கூறுவீராக! நீங்கள் பிரார்த்தனை செய்யாவிட்டால் என் இறைவன் உங்களைப் பொருட்படுத்தவே மாட்டான். நீங்கள் மறுத்துவிட்டதால் தண்டனை உங்களை பற்றிக் கொள்ளும்"**

( 25 : 78 )

இவ்வசனத்திலிருந்து உணர முடியும் காரியமாவது, அல்லாஹ்விடம் உறவை வைத்துக் கொள்வோர்களிடம், அதாவது பிரார்த்தனை மூலம் அல்லாஹ்விடம் நடப்பை ஏற்ப்படுத்திக் கொள்வோர்களிடம், அவர்களின் அந்த உறவுக்கு ஏற்ற அளவிற்கு அல்லாஹ் அவர்களின் பாதுகாவலனாகயிருக்கின்றான். பிரார்த்தனை மூலம் மனிதனுக்கு இறைவனிடம் இவ்வளவு பெரிய உறவை ஏற்படுத்த முடியுமா? என சிலர் கேள்வி எழுப்புகின்றனர்.

துவா மூலம் பொழியும் வார்த்தைகள் என்பது மனிதனின் உயிருள்ள எண்ணங்களின் வெளிப்படுத்தலாகும். நிச்சயமாகவும் மனிதனின் அனைத்து விவகாரங்களுக்கும் அல்லாஹ்வின் தேவை அவருக்கு அவசியமாகயிருக்கின்றது. அதனால் அல்லாஹ்வின் அடிமை என்ற நிலையில் மிக ஆழமாக அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்த வேண்டியது மனிதனுக்கு கட்டாயமாகும். அல்லாஹ்விடமான உறவு மனிதனுக்கு உருவாகுவது அவரது உள்ள பூர்ணமான உணர்வின் அடிப்படையிலாகும். அவரது நிலை நிற்புக்கு இறைவனின் தேவை அவசியமாகயிருப்பதால் மனிதன் இறைவனிடம் நெருங்கி கொள்கின்றான். ஒரு காரியம் கூறாமலிருக்க முடியாது. அதாவது ஒருவருக்கு வலுவான இந்த நம்பிக்கையை தக்க வைத்துக் கொள்ள முடியாது. ஏனெனில், நம்பிக்கை என்பது சிந்தனை அல்லது உணர்வை மட்டுமே வழங்குகிறது. ஆனால் ஒருவர் இக்காரியத்தில் மிக ஆழமான உணர்வை அடைந்துவிட்டால், அதாவது அனைத்து ஆற்றலையும் பெற்ற, எல்லையற்ற, முழுமையான, நித்தியமான ஒரு மாபெரும் சக்தி நிலை நிற்கிறது என்ற திடமான பகுத்தறிவினை பெற்றுவிட்டால், அப்பகுத்தறிவின் அல்லது அவ்வுணர்வின் முன்னால் மனிதன் பலவீனமாகி கொள்கிறான் என்று மட்டுமல்ல மிகவும் பலவீனமாகி விடுகிறான். அல்லாஹ்வின் விருப்பம் அல்லது அவனது துணையின்றி

தனது வாழ்க்கை நிலை நிற்பதில்லை என்ற உண்மையை அவர் புரிந்து கொள்கிறார்.

இறுதியாக, நமது நம்பிக்கை வலுப்பெற நான் அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்கிறேன். எங்கள் தவறுகளை மன்னித்து எங்களுக்கு நேர்வழி காட்டிட நான் பிரார்த்தனை செய்கிறேன். ஆமீன் இன்ஷா அல்லாஹ்.

அடுத்த வெள்ளிக்கிழமையும் இந்த தலைப்பை அடிப்படையாக்கிகொண்டே நான் பேசுவேன்.

**Translated by:**

***Azim Ahmad***

Email: *azimahmad070@gmail.com*

Ph: 7339689239




**ISSUED BY:**

**R. JAMALUDDIN RAOTHER**

Amir Kerala South Zone, India

Jamaat Ul Sahih Al Islam

Email: jamal.raother@gmail.com

Phone: 9447001832, 04752252663

Blog: www.sahih-al-islam.blogspot.in